



திருவள்ளூர் மாவட்டம் ஆவடி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட திருவேற்காடு பகுதியில் சலவை தொழிலாளர்களுக்கு பயன்பெறும் வகையில் ஆவடி சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து 40 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள சலவைத்துறை (ஏ) டோபிகான கட்டடத்தினை பயன்பாட்டிற்கு சிறுபான்மை மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் திறந்து வைத்து 30 சலவை தொழிலாளர்களுக்கு தலா 6700 ரூபாய் மதிப்பிலான LPG கூடிய சலவைப் பெட்டி வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப், நகர மன்ற தலைவர் என்.இ.கே.மூர்த்தி, நகராட்சி ஆணையர் தட்சிணாமூர்த்தி, நிர்வாகிகள் பிரபு கஜேந்திரன், கே.ஜெ.ரமேஷ், சி.ஜெரால்டு, சலவைத் தொழிலாளர் கூட்டமைப்பு நிர்வாகிகள் ஏ.முனுசாமி, மு.வெங்கடேசன், இ.பாலான், சண்முகம், சங்கர், வார்டு செயலாளர்கள் பொன்.மனோகரன், துரை கோபால், பு.பரிசமுத்து உள்பட அரசு அதிகாரிகள் சலவைத் தொழிலாளர்களின் கூட்டமைப்பினர் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## கோவையில்

# மருத்துவ மாணவர்களுக்கு பட்டமளிப்பு விழா!

### அமைச்சர் மா.சுப்பிரமணியன் பட்டங்களை வழங்கினார்!

*கோவை, ஜூன் 16*

கோயம்புத்தூர் மாவட்டம், இ.எஸ்.ஐ. அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மற்றும் கோவை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் நேற்று (15.06.2025) நடைபெற்ற மருத்துவர்களுக்கான பட்டமளிப்பு விழாக்களில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் மருத்துவம் பயின்று தேர்ச்சி பெற்ற 239 மருத்துவர்களுக்கு பட்டங்களை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை செயலர் மரு.பி.செந்தில்குமார், மாவட்ட ஆட்சித்தலைவர் பவன்குமார் க.கிரியப்பனவர், பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் க.ஈஸ்வரசாமி, மாநகராட்சி ஆணையாளர் மா.சிவகுரு பிரபாகரன், தேசிய நலவாழ்வு திட்ட இயக்குனர் அருண்தம்புராஜ், மாநகராட்சி மண்டலக் குழு தலைவர் திருமதி. இலக்குமி இளஞ்செல்வி கார்த்திக், அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு. நிர்மலா, இ.எஸ்.ஐ அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.ரவீந்திரன், உதவி ஆட்சியர் பிரசாந்த் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

**இந்நிகழ்ச்சியில் அமைச்சர் மா. சுப்பிரமணியன் பேசியதாவது:-**

கோயம்புத்தூர் மாவட்டம், இ.எஸ்.ஐ. மருத்துவக்கல்லூரி மருத்துவமனை மற்றும் கோவை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாக்களில் மருத்துவ மாணவர்களின் பெற்றோர்கள் மிகவும் பெருமையுடன் கலந்துகொண்டுள்ளனர்.

இந்நிகழ்ச்சியினை சிறப்பாக ஏற்பாடு செய்துள்ள முதல்வர்களுக்கு என்னுடைய பாராட்டுக்களை தெரிவித்துக்கொள்கிறேன். இ.எஸ்.ஐ. மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு தேவையான வசதிகளை மேம்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மருத்துவத்துறையில் மருத்துவர்கள் மிகப்பெரிய சாதனையினை செய்து வருகின்றார்கள். அமெரிக்காவின் புகழ் பெற்ற மருத்துவ சங்கம் நடத்திய நிகழ்ச்சியில் கடந்த வாரம் கலந்துகொண்டேன்.

உலகின் பல்வேறு நாடுகளில் இருந்து மருத்துவ சங்கங்கள் கலந்துகொண்ட பல்வேறு அமர்வுகள் மூன்று நாட்களாக நடைபெற்றது. அதனை நடத்திய சங்கத் தலைவர் விஸ்வநாதன் என்கின்ற தமிழர் என்பது மிகவும் மகிழ்ச்சிக்குரிய ஒன்றாகும். அவர் சென்னை மருத்துவ கல்லூரியின் முன்னாள் மாணவர் ஆவார். கலிபோர்னியா யூனிவர்சிட்டியில் குரங்கு அம்மை நோய்க்கு மருந்து கண்டுபிடித்துள்ள மூன்று மருத்துவர்கள் தமிழ்நாட்டை சேர்ந்தவர்கள். இதுபோன்று ஏராளமானவர்கள் உலக புகழ் பெற்ற மருத்துவர்களாக திகழ்ந்து வருகின்றார்கள்.

இவர்களை போன்று இன்றைய தினம் மருத்துவ பட்டம் பெற்ற இளம் மருத்துவர்கள் உலகம் போற்றும் மருத்துவர்களாக சிறந்து விளங்கவேண்டும் என கேட்டுக்கொள்கிறேன். மருத்துவம் மக்கள் நல்வாழ்வுத் துறையில் 22,000க்கு மேற்பட்ட பணியிடங்கள் வெளிப்படைத் தன்மையுடன் நிரப்பட்டுள்ளன. பணியாற்றிவரும் மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களுக்கு விரும்பும் இடத்திற்கு பணிமாற்றம் அளிக்கப்பட்டுவருகின்றது.

மருத்துவ பட்டம் பெற்ற மாணவர்களுக்கு தமிழ்நாடு அரசின் மருத்துவத் துறை கதவுகள் திறந்து வைத்திருக்கின்றது. மெடிக்கல் போர்டு நடத்துகின்ற தேர்வில் வெற்றிப்பெற்று தமிழ்நாடு அரசின் மருத்துவத்துறையில் சேவையற்ற உங்களை அன்புடன் அழைக்கின்றேன்.

இவ்வாறு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

# முரசொலியே ஒரு வரலாறு!

வீழ்வது நாமாக இருப்பினும் ★ வாழ்வது தமிழாக இருக்கட்டும் ★

### பேரா. சுப.வீரபாண்டியனின் ஒரு நிமிடச் செய்தி!

**1942** ஆம் ஆண்டு முதல் இன்று வரையில் வெளிவந்து கொண்டிருக்கின்ற ஒரு ஏடு 'முரசொலி' என்பதை நாம் அறிவோம்.

ஆனால், அது வெறும் ஏடன்று. அதைக் கொண்டு வருவதற்கு தலைவர் கலைஞர் அவர்கள் எத்தனைப் போராட்டங்களைச் சந்தித்திருக்கிறார் என்பதைப் பார்த்தால்; அதுவே ஒரு வரலாறு என்று தோன்றும்.

1942 ஆகஸ்ட் 10ஆம் தேதி முதல் 'முரசொலி' வெளிவந்தது என்றாலும் அது வெறும் துண்டறிக்கையாகத்தான் வந்தது. அதையும் கூட தொடர்ந்து நடத்த முடியவில்லை.

பிறகு 1948 ஆம் ஆண்டிலிருந்து வந்தது.

நின்று போன முரசொலி 1954 ஆம் ஆண்டிலிருந்து வார இதழாக வந்தது.



பேராசிரியர்
**சுப.வீரபாண்டியன்**

அது எப்போது நாளேடாயிற்று.?

பெரியார் பிறந்த நாளில்; அதுவும் பெரியாரை விட்டுப் பிரிந்திருந்த நேரத்தில் தி.மு.க.வில் இருந்த நேரத்தில் கலைஞர் அவர்கள், பெரியார் பிறந்தநாளான செப்டம்பர் 17 ஆம் நாள் அன்று தான், 1960 ஆம் ஆண்டு, முரசொலியை



ஒரு நாளேடாக நடத்தத் தொடங்கினார்.

ஒவ்வொரு கட்டத்திலும் அவர் சந்தித்த சிக்கல்கள் பல!

அது துண்டறிக்கையாக வருகிற போது கூட அதில் வந்த செய்திக்காக சிதம்பரத்திற்கு கூட்டத்திற்கு வரக் கூடாது என்று கலைஞருக்கு காவல் துறை தடை விதித்தது.

பிறகு வார ஏடாக ஆன பிறகு முகவர்கள் பணம் தரவில்லை.

எத்தனையோ போராட்டங்களைச் சந்தித்து, சந்தித்துத்தான் முரசொலி இன்றைக்கும் வெளிவந்துக் கொண்டிருக்கிறது!




தஞ்சாவூர் மாவட்டம்



# ரூ.1,194 கோடியில்

## புதிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டுதல்
## முடிவுற்ற திட்டப் பணிகளைத் திறந்து வைத்தல்
மற்றும்
## அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா

தலைமை

திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

தஞ்சாவூர் மாவட்டத்தில்
கடந்த 4 ஆண்டுகளில்
திராவிட மாடல் அரசின் சாதனைகள்...

ரூ.16,453 கோடியில்
61,00,315 பயனாளிகளுக்கு
நலத்திட்ட உதவிகள்

ரூ.2,269 கோடியில்
52,661 வளர்ச்சித் திட்டப் பணிகள்

மொத்தம்
ரூ.18,722 கோடி மதிப்பிலான
நலத்திட்ட உதவிகள்
மற்றும் வளர்ச்சித் திட்டப் பணிகள்



ஒருங்கிணைந்த புற்றுநோய் சிகிச்சை மையம், தஞ்சாவூர்



ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி, குருங்குளம் கிழக்கு, தஞ்சாவூர்



நாட்டு மீன் இன விதை உற்பத்தி மையம், அகரம்பேட்டை, தஞ்சாவூர்

செ.ம.தொ.இ./617/வரைகலை/2025

நாள் :
16.6.2025, திங்கட்கிழமை

நேரம் :
காலை 11.00 மணி

இடம் :
மன்னர் சரபோஜி அரசு கல்லூரி, தஞ்சாவூர்

# எல்லார்க்கும் எல்லாம்!

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in

**வெளியீடு : இயக்குநர்,** செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை - 600 009.